கட்டுரை

ரமணன்

புதுப் பொலிவுடன் பூம்புகார்!

தமிழ்நாடு கைத்தொழில் வளர்ச்சிக் கழகம் என்கிற பூம்புகார் நிறுவனம், கைத்தொழிலுக்கு சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பு அளிக்கும் வகையிலும், தமிழ் நாட்டுக் கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்தோடு 1973ல் தொடங்கப்பட்டது. இன்று 7 உற்பத்தி நிலையங்களில் தயாராகும் கைவினைப் பொருள்களை 12 விற்பனை நிலையங்களின் மூலமாக விற்பனை செய்து வருகிறது.

நிதானமாக ஆண்டுக்கு ரூபாய் 50 லட்சம் விற்பனையென மெல்ல நடந்து போய்க்கொண்டிருந்த இந்த நிறுவனம், கடந்த ஆண்டு புலிப்பாய்ச்சலில் புது உயரங்களைத் தொட்டு இருக்கிறது. ஒரே ஆண்டில் 2 கோடிக்குமேல் விற்பனையை அதிகரித்து மொத்த வியாபாரமாக 34 கோடி களைத் தாண்டியிருக்கிறது. எப்படி இந்த ஆச்சர்யமான மாற்றம் நிகழ்ந்தது?

கருக்கமாகச் சொல்வதா னால், தெளிவான தொலை நோக்கு, நிறமையான தலைமை, பணியாளர்களின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு அனைத்தையும் இணைக் கும் மின் ஆளுமை. ('E' GOVERNANCE)

காகிதங்களே இல்லாத அலுவலகம்:

அரசு அலுவலகங் களில் மேசைகளில் நிரம்பி வழியும் ஃபைல்களை, பச்சை நீல நிற நாடாக்களில் கட்டப் பட்ட கோப்புகளையே பார்த்துப் பழகியிருந்த நமக்கு சென்னையில் இருக் கும் பூம்புகார் தலைமை அலுவல கத்துக்குள் போனபோது, ஏதோ தவறுதலாக ஒரு சாஃப்ட்வேர் நிறுவனத் துக்கு வந்துவிட்டோமோ

விமான நிலையத்தில் அலங்காரம்

எனத் தோன்றியது.

ஆச்சர்யப்படவைக்கும் சுத்தம், இதமான ஒளியில் விளக்குகள், கம்ப்யூட்டர்கள் பொருத்தப்பட்ட கேபின்கள், போன் இணைப்புகள். தேடிப் பார்த்தால் கூட ஒரு பேப்பர் இல்லை. குப்பைக்கூடைகள் இல்லை. எல்லாம் ஆன்லைன் மூலம்! விற்பனை, கொள்முதல், பணப்பட்டுவாடா. அலுவலக நிர்வா கம் அனைத்தும் ஆன்லைனில் இயங்குகின்றன. ஒரு கடைநிலை ஊழியரின் ஒரு நாள் விடுமுறையாக இருந்தாலும் சரி, பல கோடிகளுக்கான காண்டிராக்ட் அனுமதியாக இருந்தாலும் சரி, ஆன்லைனில்தான் விண்ணப்பிக்கவும் அனுமதி பெறவும் முடியும்.

அரசாங்க அலுவலகங்களில் கோப்புகள் அடுத்த கட்ட அதிகாரிக்கு நகர்வது என்பதில்தான் தாமதம், தவறுகள், ஊழல் எல்லாம் நிகழ வாய்ப்புகள் அதிகம். பூம்புகார் கையாளும் மின் ஆளுமையில் கோப்புகள் நிற்கவே நேரமில்லாமல் ஓடிக்கொண் டிருக்கின்றன. எல்லா விவரங்களும் கணினியில் இருப்பதாலும், அடுத்தகட்டத்துக்கு நகர்வதில் சற்றுத் தாமதம் ஏற்பட்டால் உடனுக்குடன் சிக் கல்கள், தாமதத்துக்குக் காரணங்கள் கண்காணிக்கப் பட்டு, உயர்மட்டத்திலிருப்பவர்களால் உடனடியாகச் சரிசெய்யப்படுகின்றன. எந்தக் கோப்பு யாரிடம் எவ்வளவு நேரமிருந்தது என்பது வரை பதிவாகி விடுகிறது.

விரிந்துகொண்டிருக்கும் விற்பனையின் எல்லைகள்:

மின் ஆளுமையைச் செயலாக்குவதன் மூலம் நிர்வாகம் சீராக, சிறப்பாகச் செய்ய முடியும். ஆனால், நிறுவனத்தின் மொத்த வணிகத்தையும் எப்படி ஒரே ஆண்டில் அதிகரித்தார்கள்? ''எங்களது விற்பனை நிலையங்களில் செய்துகொண்டிருந்த விற்பனைகளைத் தவிர பெரிய அளவில் விற்பனையைச் செய்ய நாங்கள் திட்டமிட்டோம். முதல்கட்டமாக விமான நிலையம், அரசாங்கக் கட்டடங்கள், ஆடம்பர ஹோட்டல்களின் உட்புற வடிவமைப்புகளை, பூம்புகார் நிறுவனமே செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்தினோம். இதற்காக மார்க்கெட்டிங் துறை விரிவாக்கப்பட்டு வல்லுநர்கள் நிர்வாகிகளாகப் பணியமர்த்தப்பட்டார்கள். இதுவரை எங்களிடமிருந்து சில சிலைகளை வாங்கி, தனியார் நிறுவனங்கள் இந்தப் பணியைச் செய்துகொண்டிருந்தன. இப்போது பூம்புகாரே முழுப்பணிகளையும் செய்கிறது. சென்னையின் சர்வதேச விமான நிலையத்தில் நாங்கள் செய்திருக்கும் உட்புற அலங்கார வேலைகள் தமிழகக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் சர்வதேசத் தரத்தில் இருந்ததைப் பார்த்த ஏர்போர்ட் அதாரிட்டி ஆப் இந்தியா, திருச்சி, மதுரை கோயம்புத்தூர் விமான நிலையப் பணிகளையும் கொடுத்திருக்கிறது,'' என்கிறார் இதன் தலைவர் சந்தோஷ்பாபு. இ.ஆ.ப.



சந்தோஷ் பாபு



உள் அலங்காரங்கள், கைவினைப் பொருள்கள் செய்தபின் அந்த இடம் எப்படியிருக்கும் என்பதை கணினியில் படமாக்கி வாடிக்கையாளர்களுக்குக் காட்டி, மாறுதல்களுக்கான யோசனைகளை ஏற்று வடிவமைக்கிறார்கள்.

ரயில் நிலையங்களையும் அழகாக்க திட்டம் வைத்திருக்கிறார்கள். இம்மாதிரி முயற்சிகளைத் தவிர பூம்புகார் விற்பனை நிலையங்களின் விற்பனையைப் பெருக்க, பல புதிய முயற்சிகளைத் தொடங்கியிருக்கிறார்கள்!

ஒவ்வொரு கலைப்பொருளும், அது பெரிதோ சிறிதோ அவை பார்கோடிங் என்ற முறையில் எண் இடப்படுகிறது. இது கணினியில் பதிவாகியிருக்கும் பட்டியல். நிலையங்களின் விற்பனையும் மின் ஆளுமையில் இணைக்கப்பட்டிருப்பதால், எந்தக் கலைப்பொருள்களின் விற்பனை அதிகம், எவை விற்பதில்லை போன்ற தகவல்கள் அலசப்பட்டு முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இதன் மூலம் அதிகமாக விற்பனையாகாத பொருள்கள் சேருவதில்லை. அவசியமானவை உடனுக்குடன் வாங்கப்படுகின்றன. மேலும் எல்லா விற்பனை நிலையங்களும் இணைக்கப்பட்டிருப்பதால் அவசியமானபோது தேவையானவற்றை அவை இருக்கும் இடத்திலிருந்து மாற்றம் செய்து கொள்ள முடிகிறது.

ஆன்லைன் வர்த்தகம் பெரிய வெற்றியைச் சந்தித்திருக்கிறது. தபால் துறையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதால் ஆர்டர் செய்த நாளிலேயே அனுப்பப்படுகிறது, அமேசான், பிளிப்கார்ட் போன்ற நிறுவனங்களுடனும் ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். விளக்குகள், சிறு சிலைகள் போன்றவற்றைப் பரிசுப் பொருளாக அனுப்பும் ஆர்டர்கள் பெருகி வருகின்றன.

பெரிய அளவில் விளம்பரங்கள் செய்ய பட்ஜெட் இல்லாததால் ஃபேஸ்புக், டிவிட்டர், போன்ற வலைதளங்களைச் செம்மையாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இவற்றில் விளம்பரங்கள் செய்திகள் மட்டுமில்லாமல் பதிவாகும் வாடிக்கையாளர்களின் புகார்

கள் உடனுக்குடன் கையாளப்படுகின்றன. இந்தக் குழுவிலிருப்பவர்களின் கைபேசிகளிலும் இணைய வசதி செய்யப்பட்டிருப்பதால், உடனுக்குடன் பதில் பறக்கின்றன. மேலாளர்களுக்கு டேப்லெட்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை பூம்புகாரின் நெட் ஒர்க்கில் இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதால், அவர்கள் எங்கிருந்தாலும் உடனுக்குடன் பணிகள் நடைபெறுகின்றன. அவசியமானால் அவர்கள் வீட்டிலிருந்தே தங்கள் பணிகளைச் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலாளர்களின் அலுவலக வருகைக்காகப் பணிகள் காத்திருப்பதில்லை.



➲ 3டி பிரிண்டர்

அண்ணாசாலையிலிருந்தே அம்பாசமுத்திரத்தைப் பார்க்க முடியும்:

பூம்புகாரின் மின் ஆளுமையில் முக்கியமான கட்டம், அவர்களது 14 விற்பனை நிலையங்களையும் தொழிற்கூடங்களையும் வீடியோ வழியாக இணைத்திருப்பதுதான். இதனால் பல விஷயங்களை வீடியோ கான்பரன்ஸ் மூலமே செய்துவிடுகிறார்கள். ஒரு விற்பனை நிலையத்தின் விற்பனைப் பகுதி, தொழிற் கூடங்களில் நடக்கும் பணிகளைத் தலைமை அலுவலகத்திலிருந்து பார்க்க முடிகிறது. இந்தக் கட்டுரைக்காகக் கைத்தொழில் கலைஞர்களைச் சந்திக்க விரும்பியபோது, அவர்களுடன் வீடியோவில் உரையாட முடிந்தது. ''இவை உற்பத்தித் திறனை மேம்படுத்த, தவறுகளைக் குறைக்கப் பெரிதும் உதவுகிறது'' என்கிறார்கள் மேலாளர்கள்.

ஒரு நிறுவனத்தின் வெற்றியில் மனிதவள மேலாண்மை முக்கிய பங்குவகிக்கும் ஒரு விஷயம். தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், மின் ஆளுமை போன்றவற்றை எப்படி பூம்புகாரால் இத்தனை விரைவில் செயலாக்க முடிந்தது?

''ஆரம்ப கட்டத்தில் சற்றுச் சவாலாகவே இருந்தது. பணிச்சூழல் மாறுதலுக்கான பயிற்சிகளை ஒரு நிர்வாகப் பயிற்சியாக அளிக்காமல், மின் ஆளுமையின் பலன்களை அவர்களுக்குப் புரியவைத்தோம். அவர்களின் பங்களிப்பை அதிகரிக்க முடிந்தது. இன்று அவர்கள் நிறுவனத்தை மேம்படுத்த ஆலோசனைகள் கூடச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்'' என்கிறார் பூம்புகார் தலைவர்.

பூம்புகாரில் விற்பனை செய்யப்பட்ட பின்னர்தான் அதை உருவாக்கிய கலைஞர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்படும். தான் தயாரித்த பொருள் எப்போது விற்கப்பட்டது, அதற்கு எப்போது பணம் கிடைக்கும் என்று தெரியாத நிலையில் இருந்தார்கள். இன்று விற்கப்பட்ட 10 நாட்களுக்குள் அவர்கள் வங்கிக் கணக்கில் நேரடியாக பணம் செலுத்தப்பட்டு விடுகிறது. இதனால் சந்தோஷமாக இருக்கிறார்கள்.

இதுபற்றி கள்ளக்குறிச்சியிலிருக்கும் சந்தனச் சிற்பங்கள் செய்யும் கலைஞரிடம் பேசியபோது, ''இப்போதெல்லாம் சீக்கிரம் பணம் தருகிறார்கள். 10 நாள் என்று சொன்னார்கள். ஆனால், ஒரு வாரத்திலேயே வந்துவிடுகிறது'' என்றார். விலையுயர்ந்த பொருள்களுக்கு முன்பணம் தரும் வசதியும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அடுத்த தலைமுறை கைவினைத் தொழில்களை ஆர்வத்துடன் செய்ய பயிற்சிப் பட்டறைகள், பரிசுகள், ஊக்கத் தொகைகள் என பல திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது பூம்புகார். வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பொருள்கள் வாங்குவதோடு அதன் தயாரிப்பையும் பார்த்து ரசிக்கும் வகையில் கன்னியாகுமரியில் கடலோரம், அழகான நிரந்தரக் குடில்களை அமைத்திருக்கிறார்கள். இதில் கலைஞர்கள் கைவினைப்பொருள்களை உருவாக்கி விற்கும் வசதிகளுடன் நிறுவப்பட்டிருக்கும் கூடங்கள் விரைவில் திறப்பு விழாவுக்குக் காத்திருக்கின்றன.

3டி பிரிண்டரில் எழுகிறது பிள்ளையார் சிலை:

உற்பத்தித் துறையில் சீனாவில் பெரும் புரட்சியை ஏற்படுத்தி, அதிக அளவில் உற்பத்தி பெருக்கத்துக்குக் காரணமாக உள்ள 3டி பிரிண்டர் எனப்படும் முப்பரிமாணத் தொழில்நுட்பம் இந்தியாவில் இப்போதுதான் அறிமுகமாகி வருகிறது. அதை பூம்புகார் தங்களது உற்பத்தியில் பயன்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள்

ஒரு சிலையை வடித்தபின் அதை நகல் எடுக்க 'டை' எனப்படும் மோல்ட் அவசியம். இந்த 'டை' தயாரிப்பதற்கு ஒரு உருவத்தை மெழுகில் செய்து